www.Padasalai.Net www.CBSEtips.in

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

**11 - ஆம் வகுப்பு**

## பொருளியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - அ

I குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) சரியான விடையை தெரிவு செய்க.

20 X 1 = 20

1. பொருளாதாரத்தின் தந்தை யார்?
அ) மார்க்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித் இ) காரல் மார்க்ஸ் ஈ) பால் அ. சாமுவேல்சன்

2. பொதுவாக எந்த கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?
அ) விலைக் கோட்பாடு ஆ) வருமான கோட்பாடு இ) வேலை வாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

3. சாதாரண தரவரிசை பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கைபடுத்துல் இ) வார்த்தைபடுத்துல் ஈ) எதுவும் இல்லை

4. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமமாக இருக்கும் போது அது ........... .
அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது இ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை ஈ) மிகைத் தேவை

5. நிறுவனத்தின் உள்ளிருந்து தோன்றும் சிக்கனத்திற்கு காரணமாக அமைவது எது?
அ) நிதி ஆ) தொழில்நுட்பம் இ) மேலாண்மை ஈ) மேற்காணும் அனைத்தும்

6. நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி ......... .
அ) வளர்ந்து செல்விகித அளவு ஆ) குறைந்து செல்விகிதி அளவு இ) மாறா விகித அளவு ஈ) மாறும் விகித அளவு

7. வெளியுறு செலவுகள் என்பது .........
அ) கையிலிருந்து செய்யும் செலவுகள் ஆ) உண்மைச் செலவுகள் இ) சமூகச் செலவுகள் ஈ) மூழ்கும் செலவுகள்

8. நீண்டகால சராசரி செலவுக் கோடு ...........கோடு என அழைக்கப்படுகிறது.
அ) தேவை ஆ) திட்ட இ) உற்பத்தி ஈ) விற்பனை

9. கீழ்கண்டவற்றுள் உபரிதிறன் இல்லாதது ............
அ) முற்றுரிமை ஆ) முற்றுரிமை போட்டி இ) சில்லோர் முற்றுரிமை ஈ) நிறைவுப் போட்டி

10. விலைபேதம் காட்டுதலின் விளைவு ............ ஆகும்
அ) குறைவான உற்பத்தி ஆ) அதிக இலாபம் இ) பல்வேறு விலை ஈ) ஆ மற்றும் இ

11. போலிவாரம் இதனால் தோன்றுகிறது ............
அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள் ஆ) வீட்டில் தயார் செய்தவை இ) இறக்குமதிப் பொருட்கள் ஈ) எதுவுமில்லை

12. பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு
இ) கூலிக் கோட்பாடு ஈ) வட்டிக் கோட்பாடு

13. திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துகள் குறிப்பாகக் கூறுவது
அ) செல்வம் ஆ) வறுமை சமுதாயத்தின் சாபம் இ) வேளாண்மை ஈ) மேற்காண் அனைத்தும்

14. மக்கள் தொகையில் 1961 ஆம் வருடம் .......... எனப்படுகிறது
அ) சிறிய பிரிவினை வருடம் ஆ) மக்கள் தொகை வெடிப்பு இ) நகர மயமாதல் வருடம் ஈ) பெரும் பிரிவினை வருடம்

15. வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1989 - 1991 ஆ) 1990 - 1992 இ) 2000 - 2001 ஈ) 1981 - 1983

16. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்
அ) தனியார் சமூக நலம் ஆ) சமூக நலம் இ) வருவாய் ஈட்ட ஈ) தொழில் முற்றுரிமை

17. உலக அளவில் இந்தியா .......... உற்பத்தியில் மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது.
அ) பழங்கள் ஆ) மதுப் பொருட்கள் இ) காபி ஈ) தேயிலை



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

18. நிதித்துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக .......... துறைக்கானது.
அ) காப்பீட்டுத் துறை ஆ) வங்கித் துறை இ) அ மற்றும் ஆ ஈ) போக்குவரத்துத் துறை
19. ஊரகப் பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக் கொள்ள வேண்டிய கலோரி அளவு
அ) 2100 ஆ) 2200 இ) 2300 ஈ) 2400
20. சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கு மேலாக உள்ளது?
அ) கேரளா ஆ) பஞ்சாப் இ) குஜராத் ஈ) மேற்கூறிய அனைத்தும்

## பகுதி - ஆ

**II (i) எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (ii) 30 வது வினா கட்டாய வினா.** 7 X 2 = 14

21. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.
22. விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.
24. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?
25. விலை பேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகளை கூறுக.
26. பகிர்வு என்றால் என்ன?
27. இயற்க்கை வளங்களைப் பற்றி குறிப்பு வரைக.
28. முதலீட்டை திரும்ப பெறுதல் வரையறு. (Dis investment)
29. ஊரக மின்மயமாக்கல் வரையறு.ம
30. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?

## பகுதி - இ

**III (i) எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (ii) 40 வது வினா கட்டாய வினா.** 7 X 3 = 21

31. பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.
32. நுகர்வோர் உபரி கோட்பாட்டை விவரி.
33. நிலத்தின் பண்புகள் யாவை?
34. இறுதிநிலை வருவாய் (MR) பற்றி சிறுகுறிப்பு வரைக.
35. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
36. சமூகக் கட்டமைப்புகளை விளக்குக.
37. 1991 ம் ஆண்டு தொழிற்கொள்கையின் ஏதேனும் மூன்று நோக்கங்களைக் குறிப்பிடுக.
38. GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.
39. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.
40. 'நிறுவனம்' - 'தொழில்' வேறுபடுத்துக.

## பகுதி - ஈ

**IV கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி.** 7 X 5 = 35

41. அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லைகளை விவரி. ***(அல்லது)***
ஆ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.
42. அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி. ***(அல்லது)***
ஆ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
43. அ) நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்குக. ***(அல்லது)***
ஆ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.
44. அ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. ***(அல்லது)***
ஆ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.
45. அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக. ***(அல்லது)***
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.
46. அ) 2015 - 2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையின் சிறப்பு இயல்புகளைக் கூறுக.
***(அல்லது)*** ஆ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.
47. அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. ***(அல்லது)***
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com